முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

03.10.2024

1. சோதியாக பிரணவக் குடிலிலிருந்து
சுப்பனார் எந்தனை வெளிப்படுத்த
சோதியாய் உலகமெங்கும் அரங்கன் யான்
சூட்சும வடிவில் இறங்கியருள

2. அருளவே குரோதி நங்கை திங்கள்
அறிவிப்பேன் சூலவாம் குருவார அருளாசி
வரமென உலக மக்கள் நலம் காண
வழங்குவேன் என் சீடர் மக்கள் கேட்க

3. கேட்கவே என் தடம் வருபவர்க்கு
குறைகள் யாவும் நிவர்த்தி ஆகும்
கேட்காமலே அன்னதானம் புரிபவர்க்கு
குற்றமிலா ஞானவாழ்வு சித்தியாகும்

4. ஆகவே பிரணவக்குடில் தொடர்பை
அகிலத்தில் ஏற்று வந்து விட்டால்
செகத்தில் இனி பிறவியில்லை
செய்வினை முன்வினை ஏதுமில்லை

5. ஏதுவாக ஞானிகள் வந்தருள
எல்லாப் பாதுகாப்பும் தானடைவர்
ஆதரவில்லையா என கலங்குபவர்க்கு
அரங்கனும் அக்கணமே இறங்கி காத்து நிற்பேன்

6. நிற்கவே என் தரும வழியை
நினைத்து வர உடல் உழைப்புத் தர
ஏற்பு கொண்டு பொருள் உதவிதர
எண்ணமதில் யாவுமாக இறங்கி அருள்வேன்

7. அருளுவேன் அருள்பொருள் பாதுகாப்பாக
ஆரோக்கியமாய் ஆயுள் கீர்த்தியுமாக
பொருளுடன் புண்ணிய பலம் கொண்டோராக
புதுமைதனை படைத்துமே துணை நிற்பேன்

8. நிற்பேன் நீங்கள் கலியுகத்தில்
நீதி வழுவாத வாழ்க்கை வாழ
அற்புதம் மகத்துவம் பல கூட்டி
ஆதரவாய் சொல் செயலுமாக இருப்பேன்

9. இருப்பேன் நீங்கள் வாழும் தடத்தில்
எதிர்வினை மாச்சர்யம் கண்டிடா
இருப்பேன் எல்லை தெய்வமாய்
யாவர்க்கும் குலதெய்வமுமாய் அருள

10. அருளியே அஞ்ஞான வழிசெல்லா
ஆத்ம ஞான பலம் கூட்டி
அருள்சோதியாய் கலந்திடுவேன்
அனைவரும் ஞானியாகும் வண்ணம்

11. வண்ணமுடன் அகிலம் காத்திட
வடிவேலனார் ஆட்சி வந்திட
அண்ணல் அரங்கன் யானும்
அருட்சோதி வழி மகிமை புரிந்திடுவேன்
குரு வார அருளாசி முற்றே.

–சுபம்–